වධහිංසාවට එරෙහි ශ්‍රී ලංකා එකමුතුව
சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றிப்பு
SRI LANKAN COLLECTIVE AGAINST TORTURE
No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org
SLCAT

23/04/2022

**ரம்புக்கணையில் 19 ஏப்ரல் 2022 அன்று இடம்பெற்ற பொலிஸ் அராஜகத்தினை, சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் கண்டனம் தெரிவிக்கின்றது**

சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியமானது (SLCAT), 19 ஏப்ரல் 2022 அன்று இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள ரம்புக்கணையில் இலங்கை பொலிசார் மேற்கொண்ட வன்முறைக்கு தனது கண்டனத்தை தெரிவிக்கின்றது. குண்டாந்தடியினால் அடித்தல், அத்துடன் தப்பியோடிய மக்கள் மீது தொடர்ச்சியான தோட்டா பிரயோகம் உள்ளிட்ட வன்முறையைப் பிரயோகித்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. குறிப்பாக எரிபொருள் விலையுயர்வில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த மக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இந்த செயற்பாடுகள் பாரிய காயங்களை ஏற்படுத்தியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொலிசார் மேற்கொண்ட இந்த வன்முறையினால் குறைந்தது ஒரு நபராவது கொல்லப்பட்டுள்ளதாகவும் 12இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும், காயமடைந்தவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

முறைமைசார் வகையில் முன்னெடுக்கப்படும் பொலிஸ் அராஜகமானது பரவிக் காணப்படுவதுடன், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதில் அது ஒரு இயல்பாக்கப்பட்ட விடயமாகவும் ஆகியுள்ளது. இப்பிரச்சினையின் கட்டமைக்கப்பட்ட தன்மையினைக் கையாளவும் அவ்வாறான வன்முறையால் பாதிக்கப்பட்டோருக்கு விரைவாகவும் அர்த்தமுள்ள வகையிலும் பதிலளிப்பதற்கும், சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியமானது தீர்மானம் மேற்கொள்வோரை தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றது.

அனைத்து பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அவ்வமைப்பின் உயர் அதிகாரிகளும் உள்ளடங்கலான இலங்கை அரசாங்கமானது, இலங்கையின் எந்தவொரு நபரும் திடமான அடிப்படை உரிமையாக (உறுப்புரை 11) சித்திரவதையில் இருந்து சுதந்திரமாக இருப்பதற்கான உரிமையினை அங்கீகரிக்கும் இலங்கையின் அரசியலமைப்பினை பின்பற்றியொழுகும் கடப்பாடுடையதாகும். மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைக்கு எதிரான ஒரு பங்குதாரராக இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு இயற்றப்பட்ட 1994 ஆம் ஆண்டின் சித்திரவதைக்கு எதிரான சமவாயச் சட்டமானது சித்திரவதையினை தண்டனைக்குரிய குற்றமாக்கியுள்ளது. தகுதி வாய்ந்த நீதிமன்ற ஆணை ஒன்று இல்லாமல் எந்த ஒரு நபரும் கொல்லப்படுவதை அல்லது சிறையிலடைக்கப்படுவதை இலங்கையின் அரசியலமைப்பும் (உறுப்புரை 13(4)) தடைசெய்கின்றது.

முறைசார்வகையில் சித்திரவதை முன்னெடுக்கப்படுவதற்கு பதிலளிப்பதாக அடுத்தடுத்து வரும் அரசாங்கங்கள் உறுதிமொழிகளை வழங்கிய போதிலும், பொலிசார் நடந்துகொள்ளும் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை. வன்முறையை பிரயோகிப்பவர்களை அவற்றுக்கு பொறுப்புக்கூற வைக்க தவறுவதுடன் இது நேரடியாக இணைக்கப்படுகின்றது. உதாரணமாக, பதட்டத்தை தணிப்பதற்கு, தணிக்கும் உத்திகள் அல்லது வன்முறையற்ற வழிகள் பயன்படுத்தப்படாமல் தோட்டாக்களின் பிரயோகமே முதலாவது பதில் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவ்வாறான நடவடிக்கையினை "ஆகக்குறைந்த வலுப்" பயன்பாடு என அதிகாரிகளினால் விபரிக்கப்படுவதும் வன்முறைப் பிரயோகமானது இயல்பாக்கப்பட்டுள்ளமையினை எடுத்துக் காட்டுகின்றது. கொல்லப்பட்ட நபருக்கு எதிராக வழக்குகள் உள்ளன என பொலிசார் தெரிவிப்பதானது சந்தேகத்திற்கிடமாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிரான வன்முறையினை நியாயப்படுத்தி சாதாரணமானதாக்குவதற்கான முயற்சிகளாகும். அவசரமானதும் அமைப்பு ரீதியானதுமான மாற்றங்களை அங்கீகரிப்பதற்கும் அதில் ஈடுபடுவதற்குமான அரசியல் விருப்பத்தினை வெளிப்படுத்துவதற்கு அரசாங்கங்கள் தவறிவிட்டன.

**சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றது:**

No: 288/135, Jayawardana Place, Baseline Road, Colombo - 09, Sri Lanka.
+94 112 669100 slcattorture@gmail.com www.slcat.org

(அ) ரம்புக்கணையில் நடந்த சம்பவங்கள் தொடர்பான பக்கச்சார்பற்றதும் சுயாதீனமானதுமானதொரு விசாரணை உடனடியான நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் குடிமக்களுக்கு எதிரான இந்த வன்முறையில் ஈடுபட்ட அனைவரும் விரைவாக அதற்கு பொறுப்புக்கூற வைக்கப்படல் வேண்டும்.

(ஆ) பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவற்றை உறுதிசெய்யும் வகையில் இந்த விசாரணையின் முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) இந்த வன்முறையால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரிடம் அரசாங்கம் உடனடியாக மன்னிப்பு கோரவேண்டும் என்பதுடன் தன்னுடைய குடிமக்களுக்கு ஏற்பட்ட நேரடியான மற்றும் பரந்த தீங்குகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

(ஈ) பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்பங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதனை அரசாங்கமும் பொலிஸ்மா அதிபரும் உடனடியாக உறுதிப்படுத்த வேண்டும், விசேடமாக, சம்பவத்திற்கான பொறுப்புக்கூறலிற்காக அல்லது விசாரணைகளுக்கு தகவல் வழங்குவதாக அவர்கள் பழிவாங்குதலுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதனை நிச்சயப்படுத்தல்.

(உ) பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இதிலிருந்து மீள்வதனை உறுதிப்படுத்துவதற்கான நட்டஈடு மற்றும் ஏனைய அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

(ஊ) இவ்வாறான அராஜக செயற்பாடுகள் மீண்டும் ஏற்படாதிருத்தல்/என்பதுடன் பொதுமக்களுக்கு எதிராக எல்லை மீறிய மற்றும் அபாயகரமான வலு பிரயோகிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மற்றும் பொலிஸ்மா அதிபர் மேற்கொள்ள வேண்டும்.